Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 27 (11-01-1994) செவ்வாய்க்கிழமை ஓசை 327

## ஆறாவது தமிழீழ நீதிமன்றம் முல்லையில் நேற்று திறப்பு

தமிழீழத்தின் ஆறாவது நீதிமன்றம் முல்லை மாவட்டத்தில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. நேற்றுக்காலை 10மணிக்கு புதுக்குடியிருப்பில் இந் நீதிமன்றம் திறந்துவைக்கப்பட்டது. நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முல்லை மாவட்ட சிறப்புத் தளபதி சாலமன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். மங்கள விளக்கை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றிவைத்தார். நீதிமன்ற பெயர்ப் பலகையை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் திறந்துவைத்தார். தொடர்ந்து நீதிமன்றக் கட்டடம் முல்லை மாவட்டத் தளபதி (3ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரி கூட்டுப்படைத் தளம் வீழ்ச்சிக்கு வடபகுதி ராணுவத் தலைமையே பொறுப்பு!

## மேஜர் ஜெனரல் தளுவத்த உட்பட 20 அதிகாரிகள் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

பூநகரி - நாகதேவன்துறை கூட்டுப்படைத் தளத்தில் ஆயுதப் படையினருக்கு ஏற்பட்ட பேரிழப்பிற்கு வடபகுதி இராணுவத் தலைமையே காரணம் என இம் முகாம் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்திய இராணுவ விசாரணைக் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. இவ்வறிக்கையில் வடபிரதேச இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் தளுவத்த உட்பட ஏழு உயர் அதிகாரிகளிலும், 13 கனிஷ்ட நிலை அதிகாரிகளிலும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பூநகரி முகாம் அழிக்கப்பட்டது குறித்து தனது 160பக்க அறிக்கை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா விடம் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

இது குறித்து கருத்து தெரிவித்த பி.பி.ஸி. விசாரணைக் குழுவின் இவ்வறிக்கை பாதுகாப்பு படைகளுக்கு மேலும் சங்கடத்தை ஏற்படுத்தும் எனக் குறிப்பிட்டது.

பூநகரியில் பேரழிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட இந்த விசாரணைக் குழு இரு மாதங்களின் பின் தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது. மேஜர் ஜெனரல் தரம் முதல் கேணல் பதவி வரையில் உள்ள 7உயரதிகாரிகளும் 13கப்டன்களும் பூநகரி உயிர் உடைமை இழப்பிற்கு பொறுப்பு என இவ்வறிக்கை கூறுகிறது.

இதில் வடபிரதேச இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் தளுவத்த, இராணுவ உளவுப் பிரிவுத் தலைவர் பிரிகேடியர் பலகெல்ல ஆகியோரும் அடங்குகின்றனர்.

(3ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி தேர்தலுக்குப்பின் வடக்கில் பாரிய ராணுவ நடவடிக்கை

### யுத்த பிராந்தியமாகவும் பிரகடனம்

(கொழும்பு)

உள்ளூராட்சித்தேர்தலின் பின்னர் வடபகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள சிறிலங்காபடைகள் திட்டமிட்டுள்ளதாக இராணுவவட்டாரங்கள் தெவித்ததாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது இதற்கான திட்டங்கள் தற்போது தயாராகி வருவதாகவும் அநேகமாக வடபகுதி யுத்த பிராந்தியமாக பிரகடனப்படுத்தக் கூடிய சாத்தியக்கூறு காணப்படுவதாகவும் அச்செய்திகூறுகிறது

யுத்த கால விதிகளை வடக்கில் யுத்தம் நடைபெறும் போது அரசு அமுல் செய்யலாம் எனவும் நம்பத் தகுந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## சிறிலங்கா ராணுவ செயலகத்தில் வெகுஜன தொடர்பு பிரிவு கலைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ செயலகத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை இயங்கிவந்த இராணுவ செயலகத்தில் பிரத்தியேகமாக இயங்கிய வெகுஜனத் தொடர்பு பிரிவு புதிய இராணுவ தளபதி ஜெரி டி சில்வாவினால் கலைக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக பாதுகாப்பு அமைப்பின் செயலாற்று தலைமையகம் செய மையகத்தின் தொடர்பு அதிகாரியாக பிரிகேடியர் நெழுனு குணதுங்க நியமிக்கப்பட்டுள்ளார், இதுவரை இப்பதவிவகித்த பிரிகேடியர் நளின் அங்கமன இராணுவ செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### நாளை மூடப்பட்டிருக்கும்

நாளை புதன் அன்று சகல அனுமதி வழங்கும் செயலகங்களும், குடும்ப அட்டை பதிவுப் பகுதி செயலகங்களும் தவிர்க்க முடியாத காரணத்தினால் திறந்திருக்க மாட்டாது என்பதை பொதுமக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்பு பிரிவினர் ...

## யேசுநாதர் போல் அடுத்தவர் தவறுகளை நான் ஏற்றேன்

### சிசில் வைத்தியரெட்னா

(கொழும்பு)

"யேசுநாதர்போல் அடுத்தவர் தவற்றை நான் பொறுப்பேற்றேன்" என முன்னாள் ...

பெற நிர்ப்பந்திக்கப்பட்டார். ஏனையோர் நிம்மதியாக ...

க்கை என்பதை அவர்கள் தீர்மானிப்பர் எனவும் ...

### மாணவர் தலைவர் உட்பட

## 3பேரின் எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன

(கொழும்பு)

சூரியகந்த பகுதியில் கண்டு ...

...ற்றில் ஒன்று எட்டிக்கலே கனிஷ்ட வித்தியாலய மாண...

''யேசுநாதர்போல் அடுத்தவர் தவற்றை நான் பொறுப்பேற்றேன்'' என முன்னாள் இராணுவத்தளபதி சிசில் வைத்தியரெட்னா தெரிவித்தார். பூநகரி கூட்டுப்படைத்தளம் அழிப்பு தொடர்பாக இராணுவ விசாரணைக்குழுவின் விசாரணை முடிவு குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இத் தாக்குதலின் பின்னரே இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்னா ஓய்வு பெற நிர்ப்பந்திக்கப்பட்டார். ஏனையோர் நிம்மதியாக உறங்கும்போது தாம் மட்டும் தண்டிக்கப்பட்டு இருப்பதாக இந்த விசாரணைக்குழுவின் அறிக்கை காட்டுவதாக சிசில் வைத்தியரெட்னா குற்றஞ் சாட்டியுள்ளார். இதே வேளை அறிக்கை தற்போது ஜனாதிபதியிடமும் புதிய இராணுவத்தளபதி லெப். ஜெனரல் ஜெரிடி சில்வாவிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இனி என்ன நடவடிக்கை என்பதை அவர்கள் தீர்மானிப்பர் எனவும் தெரியவருகின்றது

இந்த முக்கிய அதிகாரிகள் தாக்குதலை தடுக்க தவறிவிட்டதாக விசாரணைக்குழுவின் அறிக்கை கூறுவதால் இதை இராணுவ நீதிமன்றம் விசாரிக்குமா அல்லது வேறு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை அரசு முடிவு செய்யும் எனவும் பதவி விலகிய இராணுவத்தளபதி சிசில் வைத்தியரெட்னா கூறினார்.

# ஜனாதிபதிக்கு வழங்குவதற்கு முன் சிசிலுக்கு அறிக்கை கிடைத்தது

## விசாரணைக்குழு நடவடிக்கை கிளப்பியுள்ள சர்ச்சை

(கொழும்பு)

பூநகரி கூட்டுத்தளம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலால் ஏற்பட்ட தோல்வி குறித்து விசாரணைகளை மேற்கொண்ட இராணுவவிசாரணைக்குழு தனது அறிக்கையின் பிரதி ஒன்றை முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னாவிடம் சமர்ப்பித்துள்ளது.

இதைத் தொடர்ந்து சிறிலங்கா இராணுவ வட்டாரங்களில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. மேற்படி அறிக்கை நேற்று முன்தினமே ஜனாதிபதி திரு.டி.பி.விஜேதுங்கவிடம் கையளிக்கப்பட்டது. ஆனால் இவ் அறிக்கையின் பிரதி ஒன்று கடந்த ஐந்தாம் திகதியே சிசில் வைத்தியரட்னாவிடம் கையளிக்கப்பட்டு விட்டது,

மேலும் தற்போதைய இராணுவத் தளபதியான ஜெரிடி சில்வாவுக்கு நேற்று முன்தினம் நள்ளிரவு வரை மேற்படி அறிக்கையின் பிரதி வழங்கப்படவில்லை.

இதைத்தொடர்ந்தே இராணுவவட்டாரங்களில் பெரும் சாச்சை ஏற்பட்டுள்ளது மேற்படி அறிக்கை தற்போதைய இராணுவத் தளபதியிடமே

(3ஆம் பக்கம் பார்க்ச)

# வாகனத்தைத் துரத்தி ஹெலி தாக்கியது

## ஆஸ்பத்திரிக்கும் கலிபர் சூடு

(தென்மராட்சி)

தென்மராட்சியில் சிறிலங்கா விமானப்படையின் உலங்கு வானூர்தி ஒன்று வைத்தியசாலைப் பகுதியில் நடத்திய கலிபர் தாக்குதலையடுத்து நோயாளர்கள் சிதறி ஓடினர்.

நேற்றுக்காலை 8.00மணியளவில் மிருசுவிலுக்கும் கொடிகாமத்திற்கும் இடையே பிரதான வீதியில் வந்துகொண்டிருந்த வாகனம் ஒன்றை துரத்தித் துரத்தி உலங்குவானூர்தி கலிபர் தாக்குதலை நடாத்தியது,

இதேவேளை கொடிகாமம் அரசினர் வைத்தியசாலைப் பகுதிகளிலும் உலங்குவானூர்தி தாக்குதலை நடாத்தி

(3ஆம் பக்கம் பார்க்க)

# வாகரையில் ராணுவத்தால் 500 பொதுமக்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெல்லாவெளி பகுதிக்கு வந்த விசேட அதிரடிப் படையினர் மூன்று தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பு வாகரைப் பகுதிக்கு கடந்த நாலாம் திகதியன்று வந்த இராணுவத்தினர் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு ஐந்நூறுக்கும் அதிகமான தமிழர்களைக் கைது செய்துள்ளனர். இவர்கள் அனைவரும் முகாமிற்கு

(3ஆம் பக்கம் பார்க்க)

...பொதுமக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்பு பிரிவினர் அறியத்தருகின்றனர்.

...பாதுகாப்பு அமைப்பின் செயலாற்று தலைமையகம் செயற்படும் என புதிய இராணுவ தளபதி தெரிவித்துள்ளார்.

இந்த செயலாற்று தலை...

(கொழும்பு)

சூரியகந்த பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டவற்றில் மூன்று எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று எட்டிக்கலே கனிஷ்ட வித்தியாலய மாணவர் தலைவன் ரோஸ் சாந்த (வயது 16) என்பவரினது

(3ஆம் பக்கம் பார்க்க)

# தலைவர் பிரபாவின் விசேட பணிப்பில் சிங்கள ராணுவ சிப்பாய் விடுதலை

(யாழ்ப்பாணம்)


தேசியத் தலைவர் பிரபாகரனின் விசேட பணிப்பின் பேரில் பூநகரிச் சமரில் காயமுற்று விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த சிங்கள இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ரஞ்சித் குணசேகரா (25) என்ற இச் சிப்பாய் சுகவீன முற்றுள்ள நிலையில் கொழும்பில் மேலதிக சிகிச்சை பெற வாய்ப்பளிக்கும் பொருட்டு மனிதாபிமான அடிப்படையில் தலைவர்பிரபாகரன் இம் முடிவை எடுத்தார்.

3வது சஜபாகுரெஜிமன்டில் லான்ஸ் கோப்ரலாக பதவி வகித்த குணசேகரா கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்தவராவார் இவர் ஆர். சி. எல். குழுவின் பொறுப்பாளர் ஆவர்.

இவரை தமிழீழ அரசியல்

(4ஆம் பக்கம் பார்க்க)



பூநகரியில் கைதான இராணுவச் சிப்பாயின் விடுதலை தொடர்பான உத்தியோகபூர்வ பத்திரத்தில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி சென்றிக் பிரலா கையொப்பமிடுவதையும் அருகில் அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் கரிகாலன் இருப்பதை முதலாவது படத்திலும், விடுவிக்கப்பட்ட இராணுவச் சிப்பாய் லாண்ட்ஸ் கோப்ரல் ஜசாத் ரஞ்சித் குணசேகராவை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## வரி விளம்பரம்

### இலவசம்

பணவசதியற்ற 24 சைவ பாலகர்களுக்கு தைப்பூசத் தினத்தன்று காலை 10 மணிக்கு 179, பிறவுண்வீதியில் இலவச பாலர்பாடசாலை ஆரம்பமாகவுள்ளது சேரவிரும்புவோர் சுயவிலாசத்துடன் 15-ம் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும். பாலர்கல்விக் கழகம், 49/5 யாழ்றோட். (7189)

### மார்க்கோசின் பூச்சி கொல்லி

மார்க்கோசின் செய்திறன் கொண்ட சிறந்த பூச்சி கொல்லி. பயிரில் துரிதமாகப் பரவும் தன்மை நிறைந்தது. பூச்சி, புழுக்கள், அழுக்கணவன் முதலியவற்றின் விருத்தியையும், பூச்சிகளின் எதிர்ப்புச்சக்தி விருத்தி செய்வதையும் கட்டுப்படுத்துகிறது. வட்டுக்கோட்டை அப்பையா ஸ்ரோஸ் கடையில் விற்பனையாகின்றது. 'மில்க்வைற்' (சி-8328)

### வெற்றுப் போத்தல் கொள்வனவு

அவசர தேவைக்காக (முழு அளவு) வெற்றுப் போத்தல்கள் உடன் தேவை. நியாய விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: ரி. ஆர். ஆர் ஓ. லிமிட்டெட் 106, 4-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். (சி-8314)

### விற்பனைக்கு

அரசாங்க, தமிழீழ விடுமுறை நாட்கள் அடங்கிய படக்கலண்டர்கள் ரூபா 6/-க்கு எம்மிடம் விலாசம் பதிப்பித்து பெற்றுக்கொள்ளலாம். மற்றும் பெரிய, நடுத்தரக் கலண்டர்களுக்கும்- ஸ்ரீலங்கா அச்சகம், ராஜா தியேட்டர் அருகாமை, ஸ்ரீகாந்தா அச்சக லேன், யாழ்ப்பாணம். (7140)

---

ஈழநாதம்

# 4-ம் ஆண்டு நிறைவு

## போட்டிகளும், விதிமுறைகளும்

ஈழநாதம் மக்கள் தினசரி நான்காவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக சிறுகதைப்போட்டி, கவிதைப்போட்டி என்பவற்றை நடாத்த முன்வந்துள்ளது. இப் போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப் படும்.

**சிறுகதை ✵ கவிதை**

**போட்டிகளில் கலந்துகொள்வோர் கடைப்பிடிக்கவேண்டியவை**

- படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல்வேண்டும்.
- படைப்புகள் யாவும் தாளின் ஒருபக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித்தாளில் எழுதப்படவேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்தவேண்டும்.
- ஆக்கங்கள் இதற்குமுன் பிரசுரமானதாகவோ, வேறெங்கும் பிரசுரம் செய்வதற்காக கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது.
- போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் ஜனவரி 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்தில் சேர்க்கப்படவேண்டும். பிந்திக்கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படமாட்டாது.

போட்டி முடிவுகள் யாவும் 17-02-1994 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.

இப்போட்டிகளில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் நான்காவது ஆண்டு நிறைவு விழா மலரில் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தகுதியானவை எனத் தேர்ந்தெடுக்கப்படும் ஆக்கங்கள் ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும்.

முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு நான்காவது ஆண்டு நிறைவுநாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் ''ஈழநாதம் ஆண்டு நிறைவுப்போட்டி' என கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு

ஆசிரியர்,
ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

---

## உயிரிழந்த மீனவர்களின் குடும்பத்திற்கு உதவி

பருத்தித்துறைக் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தபோது சிறிலங்கா கடற்படையின் தாக்குதலில் கொல்லப்பட்ட சக்கோட்டையைச்சேர்ந்த ஒன்பது மீனவர்களின் குடும்பத்தவர்களுக்கும் மரணச் செலவாக தலா மூவாயிரம் ரூபா பருத்தித்துறை பங்குத்தந்தை வண பிதா பி. எம். இம்மனுவல் அடிகளார் இச்சம்பவம் நடைபெற்ற மறுதினம் அவர்கள் ஒவ்வொருவருடைய இல்லத்துக்கும்நேரில் சென்று வழங்கியுள்ளார். (17)

### மறைக்கல்வி இலவச வகுப்பு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பெரும்பாலான கிறிஸ்தவ தேவாலயங்களில் வார இறுதி நாட்களில் சிறுவர்களுக்கு மறை அறிவைப்பெருக்கும்நல்லநோக்குடன் மறைக்கல்வி வகுப்புகள் இலவசமாக நடாத்தப்படுகின்றன. (24)

## மட்டக்களப்பு தேர்தலில் சு. க. போட்டியிடாது

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி போட்டியிடாது என்றும் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் கை சின்னத்தில் போட்டியிடும் என்றும் அக் கட்சியின் தலைவியான திருமதிசிறிமாவோ பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

சுதந்திரக்கட்சியுடன் கூட்டணி அமைத்துள்ள பொது ஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுக்கு இப் பகுதிகளில் அமைப்பாளர்கள் இல்லாததால் சுதந்திரக்கட்சி கை சின்னத்தில் போட்டியிடுவதற்கு அக் கட்சிகள் ஆதரவு தெரிவிப்பதாகவும், கொழும்பில் தமது உத்தியோகபூர்வ இல்லத்தில் செய்தியாளர்களை சந்தித்த திருமதி சிறிமாவோ கூறியுள்ளார்.

---

## 60-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
13-12-1975

தமிழீழ மண்ணில்
13-11-1993

### 2-ம் லெப். ஆற்றலோன்

(யோகநாதன் மகேஸ்வரன்) [தாத்தா]

(ஒப்பறேசன் 'தவளை' நடவடிக்கையில்வீரச்சாவைத் தழுவிக் கொண்ட அனைத்து வேங்கைகளுக்கும் எமது அஞ்சலிகள்)

பூநகரி மண்ணிலே நிலை கொண்ட படைதனை
ஆவென அலற வைத்த ஆற்றலோனே -
ஈழமண்ணின் விடுதலைக்கு விரைந்திட்டசெல்வமே
நீ விட்ட பணி நாம் தொடர்வோம் என உறுதி
அளிக்கின்றோம்.

''சிந்திடும் குருதியில் தேசம் தெரிகிறது.
சந்ததிக்காய் செத்திடும் வாழ்வே சரித்திரமாகிறது''

11-01-94 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியையில் சகபோராளிகள், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உம் பணி தொடரும் பெற்றோர்,
புலிமாமா (யோகநாதன்)
குடும்பத்தினர்.

சித்தன்கேணி,
வடலியடைப்பு, (7185)

---

## நினைவு கூருகின்றோம்..

## 1994-01-11

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பால் வியாபாரியான பாவற்குளத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சுகயீனம் காரணமாக எமைப்பிரிந்த,

**லிண்டன்** (மனுவேல் சூசைப்பிள்ளை-கன்னாட்டி, அடம்பன்-மன்னார்)

1988ஆம் ஆண்டு யாழ் - புங்குடுதீவுப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். தாத்தா-ரத்தினம்** (வைரமுத்து நவரத்தினம் - புங்குடுதீவு கிழக்கு-யாழ்)

1990ஆம் ஆண்டு யாழ் - வல்வெட்டித்துறை, ஊறணிப்பகுதியில் மூளைக்காய்ச்சல் நோயின் காரணமாக எமைப்பிரிந்த,

மகளிர் படையணியின் முதலாவது தளபதியான,

**மேஜர் சோதியா** (அமலஉற்பவ வசந்தி மைக்கல்- நெல்லியடி, கரவெட்டி-யாழ்)

1993ஆம் ஆண்டு அம்பாறை-களுவங்கேணிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**இளங்கீரன்-பவான்** (சபாநாயகம் பத்மநாதன் - ஆறுமுகத்தான்குடியிருப்பு -அம்பாறை)

**ஜமுனாகரன்** (கணபதி விஜயாபுரி-புன்னைக்குளம் -வெல்லாவெளி-மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(இ-8327)

---

# சோதியான விடிவெள்ளியே!

விடுதலைப் புலிகளின் மகளிர் படைப்பிரிவின்

முதலாவது தளபதி

# மேஜர் சோதியா

## [ அமல உற்பவ வசந்தி மைக்கல்பிள்ளை ]

நெல்லியடி, கரவெட்டி.



தாயின் மடியில்:
**26.09.1963**

தாயக மண்ணில்:
**11.01.1990**

ஆண்டு நாலு தேய்த்து கொண்டு
ஆனதின்று சோதியா
நீண்ட தூரம் நினைவில் என்றும்
நீங்கவில்லை சோதியா
பூண்ட வீரப் பெண் புலியே
புதுமை ஒன்றைக் காட்டியே
வேண்டும் ஈழம் வெற்றிகாண
வீர நடை போட்டாயே

வாழ்விலின்பம் காணுகின்ற
வனப்பிலுன்னைத் தமிழுக்கே
வாழ்வு என்று அடியெடுத்து
வழிநடந்து பெண்ணுக்கே
ஈழப்போரின் உரிமைகாண
எழுந்த வசந்தி சோதியே
நாளும் பெண்கள் விடிவெள்ளியே
நடை பயில்வாய் சோதியா

-குடும்பத்தினர்

(சி-8330)

யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

பாண்டவர்களைத் தெரியாதா? கட்டில் கால் போல மூன்று பேர் என்று வாயால் சொல்லி இரண்டு விரல்களைக் காட்டி, நிலத்தில் ஒரு கோடு எழுதினானாம்.

— தமிழ்ப்பழமொழி


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 11-01-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05


## பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக மாறிய கதை

"பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காக மாறிய கதையாகவுள்ளது'' இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமானும், அதன் செயலாளர் செல்லச்சாமியும் அண்மையில் கூட்டாகக் கூட்டிய பத்திரிகையாளர் மாநாடு. தாம் ஐக்கியமாகவுள்ளோம், எமக்குள் இருந்த முரண்பாடுகள் நீக்கப்பட்டு விட்டன என காட்ட முற்பட்ட காங்கிரஸ் தலைவர்களின் இம் முயற்சியானது, இறுதியில் முரண்பாடுகளை வெளிக் கொண்டு வரும் ஒன்றாகவும், மோதல்கள் இன்னும்முற்றுப் பெறவில்லை என்பதைக் காட்டுவதுமாகவே இருந்தது.

இவ்வாறானதொரு நிலை உருவாவதற்கு இ. தொ. கா. தலைவர்கள் தமது மோதலை மறைத்து வெளியில் ஒரு போலியான நிலையை உருவாக்க எடுத்த முயற்சியே காரணமாகும். அதாவது தலைவருக்கும் - செயலாளருக்கும் இடையிலான முரண்பாடுகள் பேசித்தீர்க்கப்படாமலும், பொது முடிவு ஒன்று எடுக்கப்படாமலும் மாநாட்டைக் கூட்டியது ஒரு அரசியல் சித்துவிளையாட்டு என்றே கொள்ளமுடியும். அதாவது, போலியான மாயை ஒன்றை உருவாக்க முற்பட்ட இ. தொ. கா. தலைவர்கள் அதற்குள்ளேயே வீழ்ந்துவிட்டது தான் வெட்கக்கேடானது.

இதன் காரணமாகவே இ. தொ கா. செயலாளர் செல்லச்சாமி ஐக்கியம் பற்றிப் பேசும் போது, அதன் தலைவர் ஐக்கியத்தின் அவசியத்தை விட ஒழுக்கம் பற்றியும், கட்டுப்பாடு பற்றியும் பேசவேண்டி வந்தது. அத்தோடு செய்தியாளர்கள் தலைமையின் பணிப்பிற்கு பணியாதவர்களை கிளர்ச்சியாளர்கள் என்று கூறியபோது அவர்களை துரோகிகள் என்றும், துரோகிகளுக்குள் துரோகிகள் என்றும் கூறவேண்டிய நிலை உருவானது.

இதற்கும் மேலாக, அமைச்சர் செல்லச்சாமி பத்திரிகையாளர்களின் கேள்விக்குப் பதில் அளிக்காமல், கேள்வி கேட்காதீர்கள், குழப்பாதீர்கள், இ. தொ. காவின் ஒற்றுமையைப் பாதுகாக்க ஒத்துழைப்புத்தாருங்கள் என பத்திரிகையாளரிடம் மன்றாட வேண்டிய நிலை வந்தது. தமக்குள் ஒற்றுமை, மக்களுக்காக எதையும் செய்யும் மனப்பாங்கு என்பனஇருப்பின் இவர்கள் ஏன் பத்திரி

# ஒரு போராளியின் நினைவலைகளில்

# மேஜர் சோதியா

1984-ம் ஆண்டின் முற்பகுதி.

விடுதலைக்காகப் போராட வேண்டும் என்ற ஆவலில் சோதியா நீண்ட நாட்களாக முயற்சி செய்து, விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களைச் சந்தித்தார். சோதியா தலைவரைச் சந்தித்ததன் மூலம் நானும் அவரும் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டோம்.

நாங்கள் போராளிகளாகியதிலிருந்து, பயிற்சியை முடித்து ஈழத்துக்கு வரும்வரையில் நடந்தவை நிறைய விடயங்கள். இந்தியாவில் எங்களுடன் சோதியா மருத்துவம் படித்து, எம்மோடு பயிற்சியை எடுத்து, பயிற்சியின்போதே மருத்துவப் பணியிலும் ஈடுபட்டு... அப்போது சோதியா செய்தவற்றை எல்லாம் எழுதத் தாள்கள் போதாது.

பயிற்சி முடிந்தவுடன் சோதியா உட்பட பெண் போராளிகளின்குழுவொன்று ஈழத்துக்கு வந்தது. மன்னாரில் தளம் அமைத்துத் தங்கிய அவர்களுக்கும், தலைவருக்கும் இடையிலான செய்திப் பரிமாற்றம் சோதியாவின் பொறுப்பில் விடப்பட்டது. சுற்றிவர இராணுவத்தினர் சூழ்ந்திருந்த அன்றைய நிலையில், அவர்களுக்கும் தலைவருக்கும் இடையில் பாலம் போன்று செயற்பட்டவர் சோதியாதான் அதன்பின் யாழ். கோட்டையிலிருந்த சிறீலங்கா இராணுவத்தினருடனான மோதலில் பங்கு கொண்டார்.

இதன்பின் வடமராட்சியில் 'விடுதலைநடவடிக்கை' என்ற இராணுவ நடவடிக்கையை இலங்கை இராணுவம் நடாத்தியதும், அதைத் தொடர்ந்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இருந்த இராணுவத்தினரைக் கரும்புலி கப்டன் மில்லர் தாக்கியதும், அதன்பின் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும், இந்திய இராணுவம் எம்மண்ணுக்கு வந்ததும் எல்லோரும்அறிந்தவிடயங்களாகும். இந்திய இராணுவம் இங்கு வந்ததும் மீண்டும் சோதியா களத்தில் இறங்கினார்.

கல்லுண்டாய் வெளியில் அமைக்கப்பட்டிருந்த இந்திய இராணுவத் தளம்மீதான தாக்குதலில் சோதியா முக்கிய பங்கெடுத்தார். இத்தாக்குதலின்போது அவர் நேரடி மோதல், வைத்தியச் சேவை ஆகிய இரு பணிகளிலும் ஒரே நேரத்தில் ஈடுபட்டார். அதைத் தொடர்ந்து சண்டிலிப்பாயில் இந்திய இராணுவத்தினரின் கவச வாகனம் மீதான தாக்குதலிலும் பங்கெடுத்தார். நாட்டிலிருந்த புலிகளில் பெரும் எண்ணிக்கையானோர் காடுகளில் பாசறை அமைத்துத் தங்கத் தொடங்கும் காலம் வரையில், இந்திய இராணுவத்தினரை நேர் கொண்ட சந்தர்ப்பங்களில் நடந்தமோதல்களிலெல்லாம் சோதியா பங்குகொண்டார்.

அதன்பின் காட்டிலே அமைக்கப்பட்டிருந்த பாசறைகளில் தனது மருத்துவப் பணியைத் தொடர்ந்தார். காட்டிலேதங்கியிருந்தபோது வெலிஓயாவில் சிங்கள இராணுவ அணிமீது எம்மவர்களால் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் காயமடைந்த போராளிகளுக்குக் களத்தில் வைத்தே சிகிச்சை அளித்தார்.

மீண்டும் சோதியா காட்டுப் பாசறைக்குத் திரும்பினார் சோதியாதான் முகாம் சுத்தம், சமையலறைச் சுத்தம், போராளிகளின் சுத்தம் சம்பந்தப்பட்ட விடயங்களைக் கவனிப்பார்.

பெண் போராளிகளுக்கு என்னென்ன தேவை என்பதைத் தலைவரிடமே கேட்பார். சோதியாவின் செயலாற்றும் தன்மையையும் பெண்களணியை நல்ல முறையில் வழிநடத்தும் ஒழுங்கையும் அவதானித்த தலைவர் பெண்களணிக்கான தலைமைப் பொறுப்பை 1989இன் முற்பகுதியில் சோதியாவிடம் ஒப்படைத்தார்.

தலைமைப் பொறுப்பேற்ற பின்னர், நாள்தோறும் பெண் போராளிகளைக் குழுக் குழுவாகக் கூப்பிட்டு, அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து அவர்கள் எப்படி இருக்க வேண்டும், என்ன வேலைகள்செய்யவேண்டும், சண்டை



வந்தால் எப்படிச் சண்டையிடுவது என்பது பற்றிக் கதைப்பார். போராளிகளுடன் கதைப்பதில், அவர்களுக்கு அறிவுரைகள் கூறுவதில் சோதியாவுக்கு நிகர் அவரேதான்.

சோதியா பொறுப்பெடுக்க முன், ஆண் போராளிகளும் நாங்களும் எமது வேலைகளையெல்லாம் அட்டவணை போட்டு ஒழுங்குபடுத்திச் செய்தோம். சோதியா பொறுப்பெடுத்த பின் எமது வேலைகளை நாமே தனித்துச் செய்வதற்கு தலைவரிடம் அனுமதி கேட்டார். தலைவரும், பெண் போராளிகள் தமது கால்களை ஊன்றி வளர்வதுதான் தனது விருப்பமாகும் என்று அனுமதித்துவிட்டார். அதன் பின்னர் எமக்கான எல்லா வேலைகளையும் நாமே செய்யத் தொடங்கினோம்.

சில காலத்தின்பின் பெண் போராளிகளின் எண்ணிக்கை பெருகிவிட்டதால் எமது பாசறையில் இருந்த வசதிகள் போதாமல் போய்விட்டன. முக்கியமாகத் தண்ணீர் ஒரு பெரும் பிரச்சினையாக இருந்தது.

தலைவர் சோதியாவைக் கூப்பிட்டு, பெண் போராளிகளுக்கெனத் தனியாகத் தளம் அமைத்து, தனியாக ஒரு கிணறு வெட்டும்படி உத்தரவிட்டார் சோதியா பெண் போராளிகளைப் பல குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு வேலையைக் கொடுத்து புதிய தளம் ஒன்றை அமைத்தார். அத்தளத்துக்கு 'விடியல்' எனப் பெயரிடப்பட்டது. இந்தப் பெயரைப்பற்றி தலைவர் கருத்துத் தெரிவிக்கும்போது 'பெண்கள் தனித்து நின்று செயற்பட்டு ஒரு விடிவைக் காணவேண்டும்' என்று சொன்னதாகச் சோதியா என்னிடம் சொன்னார்.

தனித் தளம் அமைக்கப்பட்ட பின்னர் சோதியா பெண்போராளிகளை வளர்த்தவிதம் தனியானது. எல்லா வேலைகளையுமே ஒருஒழுங்கு முறைக்குள்கொண்டுவந்தார். எல்லாப் போராளிகளுடனும் கதைப்பதன்மூலம் அவர்களுக்கு உற்சாகத்தையும் நம்பிக்கையையும் ஊட்டலாம் என்பதில் சோதியா அதீத நம்பிக்கை வைத்திருந்தார். பெண்களைச் சகல வேலைகளிலும் பயிற்றுவித்தார்.

சோதியாவின் தலைமையில் விடியலில் பெண்போராளிகளின் ஐந்தாவது படையணி தனது பயிற்சிகளை ஆரம்பித்தது. பயிற்சியாளர்களுக்கு என்னென்ன வேண்டும் என்று கேட்டு அறிந்து அதற்கான ஒழுங்குகளை ஓடி ஓடிச்செய்து கொண்டிருந்தார். எல்லோரையும் கவனிக்கவேண்டும் என்ற ஆர்வத்தில் அவர் தன்னைக் கவனிக்கத் தவறிவிட்டார். ஐந்தாவது படையணி தனது பயிற்சிகளை முடிக்கும் தறுவாயில் சோதியா சற்றுச் சோர்வாக இருப்பதாக எனக்குப்பட்டது.

தனக்கு நெஞ்சு வலிப்பதாக சோதியா ஒரு நாள் என்னிடம் சொன்னார். "கொஞ்ச நாளைக்கு ஓய்வெடுங்கோ. ஒழுங்காகச் சாப்பிடுங்கோ'' என்று நான் கூறினேன். ஆனால்சோதியா தனது வழமையான வேலைகளில் எதையுமே நிறுத்தவில்லை.

ஒரு நாள் தலைவர் சோதியாவைக் கூப்பிட்டார். அன்றும் சோதியாவுக்குக் காய்ச்சல்தான். ஆனால் யாரிடமும் சொல்லவில்லை. தலைவரிடம் போய் வந்தார். மறு நாள் காலையில் சோதியா எழும்பவில்லை. என்னவென்று கேட்டபோது தனக்குக் காய்ச்சலும் நெஞ்சு நோவுமாக இருப்பதாகக்கூறினார் நான் சோதியாவுக்கான மருந்துகளை மருத்துவப் பிரிவினூடாகப் பெற்றுக் கொடுத்தேன். தலைவரின் இடத்தில் நிற்கும் வைத்தியரைக் கூப்பிட்டுக் காட்டுவோமா என்று நான் கேட்க, அவர் அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டார். மறுநாளும் வருத்தம் குறையாததால் நான் அந்த வைத்தியரைக் கூப்பிட்டுக் காட்டினேன். தலைவரும் வந்து பார்த்தார். இருவரும் சோதியாவை யாழ்ப்பாணத்துக்குப் போய்ச்சிகிச்சை செய்யுமாறு கூறினார்கள்.

யாழ்ப்பாணம் போன சோதியாவின் உடல் நிலை பரவாயில்லை என்ற செய்தி எமக்குக் கிடைத்தது. சோதியா திரும்பி வந்துவிடுவார் என்றே தலைவர் எண்ணியிருந்தார் நாமும் அவ்வாறே எண்ணியிருந்தோம். ஆனால் திடீரென, சோதியா வீரச்சாவடைந்த செய்தி எமக்குக் கிடைத்தது. நாம் அதிர்ந்து போனோம்.

ஆனாலும் சோதியாவின் புகழுடலை விடியலுக்கு கொண்டு வருவதற்கான ஒழுங்குகளைச் செய்துவிட்டுக் காத்திருந்தோம். விடியலுக்குக் கொண்டுவரப்பட்ட சோதியாவின் உடலை, வழமையாகச் சோதியா படுக்கும் இடத்தில் வைத்து அஞ்சலி செய்தோம்.

சோதியா எம்மைவிட்டுப் பிரிந்தது நேற்றுத்தான் போலிருக்கிறது. சோதியா அன்று போட்ட அந்தப் பலமான அடித்தளம்தான் இன்று மகளிர் படையணி ஒரு பலம்வாய்ந்த இராணுவ அணியாக உருவாகிய காரணங்களுள் ஒன்றாக அமைந்தது.

- சுகி

## சோதியா என்னும் சோதி

ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும் பலர் கருதுகின்றனர். எனினும் மேற்படி

## புதைகுழி பற்றி விசாரிக்க ஐ. நா. குழு வேண்டும்

பத்திரிகையாளரிடம் மன்றாட வேண்டிய நிலை வந்தது. தமக்குள் ஒற்றுமை, மக்களுக்காக எதையும் செய்யும் மனப்பாங்கு என்பனஇருப்பின் இவர்கள் ஏன் பத்திரிகையாளர்களிடம் இவ்வாறு மன்றாட வேண்டும், மண்டியிடவேண்டும்? தமது ஒற்றுமையை வெளிக்காட்டுவதன் மூலம் பத்திரிகைகளின் வாயை அடைத்துவிடலாமே.

ஆனால், இவர்கள் இருவரும் தமக்குள் முரண்பாட்டை வைத்துக் கொண்டு கூட்டாகக் கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டை சிங்கள பேரினவாத பத்திரிகையாளர்களும், அரசாங்க சார்புப் பத்திரிகையாளர்களும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டனர். பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டினால் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லியே ஆக வேண்டும் என்றதொரு நிலையில் இ. தொ. கா. தலைவர்கள், சிக்கிக் கொண்டார்கள் என்றே கூறவேண்டும்.

அதாவது, இ. தொ. கா. தலைவர்களுக்கு இடையில் இருந்த முரண்பாட்டைப் பேரினவாதப் பத்திரிகைகளும், அரச கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகையாளர்களும் தீவிரமாக்கியுள்ளனர் என்றே துணிந்து கூறலாம். தொண்டமானும், செல்லச்சாமியும் பரஸ்பரம் சுமத்திய குற்றச்சாட்டுக்களை அவர்கள் மறக்க / மறுக்க முற்பட்டபோது பேரினவாத பத்திரிகையாளர் அதனை விட்டு விடத் தயாராக இல்லை. இறுதியில், சமாதானப் பேச்சிற்கு எனக் கூட்டியஇ. தொ. கா. தலைவர்கள் பத்திரிகையாளர் மாநாட்டில், ஒருவரை ஒருவர் துரோகி என்றும், துரோகிக்குள் துரோகி என்றும் குற்றம் சாட்டும் கேவல நிலை உருவானது. தலைவர்களுக்கு இடையில் விரிசல்கள் மேலும் அதிகரிக்கும் வாய்ப்புக்களையும் உருவாக்கியது.

சுருங்கக் கூறின் சிங்களப் பேரினவாத சக்திகள் எதை விரும்புகின்றனவோ அதற்கு வாய்ப்பளித்துவிடும் ஒன்றாகவே இப்பத்திரிகையாளர் மாநாடு முடிவுற்றதெனலாம். மலையக தமிழ் மக்களுக்குள் இடையில் உள்ள ஒற்றுமை குலைக்கப்பட வேண்டும், மலையக மக்களில் கணிசமானோரை பிரதிநிதித்துவப்படுத்தும், பலமான சக்தியான இ. தொ. கா. உடைக்கப்படவேண்டும், பலவீனப் படுத்தப்பட வேண்டும் என்ற பேரினவாதத்தின் நோக்கம் முன்னேற்றம் கண்டுள்ளது என்றே கூறலாம்.

இந்நிலையில், இ. தொ. கா. தலைவர் தாம் வைத்த பொறியில் சிக்கிக் கொண்டதாகவே கொள்ள வேண்டும். ஆனால், தமக்குள் உண்மையான ஐக்கியத்தை உருவாக்காத வரையில் இதில் இருந்து அவர்கள் விடுபட்டு வரமுடியாது. இதேவேளை, மலையக மக்களின் ஒற்றுமையை குலைத்துவிட சிங்களப் பேரினவாதம் எவ்வளவு தீவிர கவனம் செலுத்துகின்றது என்பதைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு இது தக்கதொரு பாடமாகும்.

## சோதியா என்னும் சோதி

நெஞ்சில்விடுதலை நெருப்பைச் சுமந்தவள்
நெடிதுயர்ந்துவான் முகடை அசைத்தவள்
அஞ்சுதல்அறி யாதபெண் புலியிவள்
அன்புகாட்டிநம் நெஞ்சிலே வாழ்பவள்
பஞ்சுமூண்டதீ போலப் பரவியே
பகைவர்பாசறை மீதிலே பாய்ந்தவள்
நஞ்சணிந்தவள்; ''சோதியா'' என்றொரு
நாமம்கொண்டொரு காவியம் ஆனவள்.

வெங்களங்களை வெல்லவும், பாசறை
வேவுபார்க்கவும், கனரக ஆயுதம்
தங்கள்கைகளில் ஏந்தவும், பற்பல
தகுதியான வேலைகள் செய்யவும்
இங்கும்பெண்களால் இயலும் என்றாக்கிய
இனியவள், பெண்புலிச் சேனையைக்கட்டிய
மங்கைசோதியா நினைவுநம் மண்ணிலே
மறைந்திடாதொரு சோதியாய் எரிந்திடும்.

பெண்களென்பவர் பூவெனப் பாடிய
புலவர்உவமைகள் போய்விழச் செய்துமே
வண்ணவண்ணக் கனவுகள் யாவையும்
வாசலோடு விட்ட மகளிவள்
உன்னிஉன்னி உழைத்த, விடுதலை
உணர்வுஏறிய காற்றின் மூச்சிவள்
அண்ணனாகிய தலைவனின் மீதிலே
அளவிலாப்பெரும் அன்பினைக் கொண்டவள்.

— புதுவை இரத்தினதுரை

### பூநகரி

படையினர் உற்சாகம் குன்றியுள்ள இவ்வேளையில் இராணுவ அதிகாரிகள் பதவி இறக்கம் செய்யப்படுவார்கள் என்பது சந்தேகம் எனக் குறிப்பிடும் பி.பி.ஸி, பூநகரி தாக்குதலில் வீரச்செயலுக்காக சில அதிகாரிகள் ஏற்கனவே பதவி உயர்வு பெற்றுள்ளதையும் சுட்டிக் காட்டுகிறது.

நால்வர் கொண்ட இந்த விசாரணைக்குழு பலரும் அறிந்த ஒரு விடயத்தை குறிப்பிட்டுள்ளது. இலட்சிய வேகம் கொண்ட புலிகளுக்கு எதிராக இராணுவம் தனது உத்திகளை மறுபரிசீலனை செய்யவேண்டும் என அக்குழு குறிப்பிட்டுள்ளது.

சாதாரணமட்டத்திலுள்ள படையினர் இராணுவ நீதிமன்றம் நடாத்தும் இவ்வகையான விசாரணையை விரும்புவார்கள். யுத்த முனையில் முகம் கொடுப்பவர்கள் சாதாரண சிப்பாய்கள்தான். இராணுவத்திலுள்ள மேல் அதிகாரிகள் போர் நடக்கும் இடங்களுக்குப் போவதில்லை. ஆகவே இராணுவ நீதிமன்றம் தளபதிகள் மீது மேற்கொள்ளும் விசாரணையை இராணுவச் சிப்பாய்கள் ஆதரிப்பார்கள் என்று அமல் ஜெயசிங்கா பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் கூறியுள்ளார்.

இராணுவத்தில் சிப்பாய்கள் போதியளவு இல்லை. யுத்தத்தை மேற்கொண்டு நடத்தவும் திறமை வாய்ந்த அதிகாரிகளும் குறைவு, ஆகவே சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் மீது நடவடிக்கை எடுப்பதன் மூலம் சிறிலங்கா இராணுவத்தை ஒரு யுத்த தொழில்சார்ந்த இராணுவமாக மாற்றியமை

சமர்ப்பிக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும் பலர் கருதுகின்றனர். எனினும் மேற்படி விசாரணைக் குழுவை சிசில் வைத்தியரட்னாவே நியமித்ததினால் அவரிடமே மேற்படி அறிக்கை சமர்ப்பிக்கப் பட வேண்டும் என்றும் வேறு சிலர் கருதுகின்றனர். இதனால் இச் சர்ச்சை இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் குழப்பத்தையும் இழுபறி நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

### 3பேரின்

என அவரது பெற்றோர் அடையாளம் காட்டினர். இவரது உடையிலிருந்துஇவர் அடையாளம் காணப்பட்டார். மற்றொன்று பாணந்துறையைச் சேர்ந்த மாணவரான அனில் விக்கிரமசிங்க என்பவருடையது என அவரது 'பிளாஸ்ரிக்' கட்டுப்பல்லிலிருந்து அவரது சகோதரியினால் அடையாளம் காணப்பட்டது.

மேலும் வேறொருவருடைய எலும்புக் கூடு அவரது மனைவியால் அடையாளம் காணப்பட்டது. இதனையடுத்து விசாரணைகள் ஜனவரி 15 வரை ஒத்திப் போடப் பட்டுள்ளன.

இதேவேளை, அடையாளம் காணப்பட்ட இவ் எலும்புக் கூடுகள் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள்முன்னிலையில் நேற்று அடக்கம் செய்யப்பட்டன.

இந் நிகழ்வில் காணாமல் போனவர்களின் பெற்றோர், மாணவர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்போர் கலந்து கொண்டனர். இறுதி ஊர்வலத்தின் போது பொலிசார் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர் ஒலிபெருக்கிக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது டன் மயானத்தில் பேச்சுக்கள் நடாத்தப்படக் கூடாதெனவும்தெரிவிக்கப்பட்டது.

ப்பதை விட அரசுக்கு வேறு வழியில்லை.

-இவ்வாறு அமல் ஜெயசிங்கா மேலும் கூறியுள்ளார்.

## ஐ. நா. குழு வேண்டும்

### மனித உரிமை குழு கோரிக்கை

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டியவில் பெருமளவு புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மனித உரிமை குழு இது குறித்து விசாரிக்க ஐ. நா குழு அழைக்கப்படல் வேண்டும் என கோரியுள்ளது.

சீ ஆர். எம் எனப்படும் மனிதஉரிமை அமைப்பு வெளியிட்ட இருபக்க அறிக்கையில் இப்படியான விஷயம் குறித்த அரசின் முன்னைய செயற்பாடுகள் திருப்தியானவை அல்ல என்று குறிப்பிட்டுள்ளது. எட்டு ஆண்டுகளுக்கு முன் கிழக்கு மாகாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிகளையும் இக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

கிழக்கு மாகாண புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் அங்கு கிடந்த சடலங்கள் இரகசியமாக வேறு இடத்திற்கு அகற்றப்பட்டதையும் இம் மனித உரிமை குழு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

## மட்டு. பிரதேசசபை முன் 'ஜொனி' கண்ணிவெடி

(கொழும்பு

மட்டக்களப்பு பிரதேச சபைஅலுவலகம்முன் ஜொனி கண்ணிவெடி ஒன்று மீட்கப்பட்டதாக பொலிஸ்தலைமை அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது அவ் அலுவலகம் முன்பாக புதைக்கப்பட்ட நிலையில் இருந்து மீட்கப்பட்டது.

தகவல் ஒன்றையடுத்து பொலிசார் இப்பகுதியில் சோதனை நடத்தியபோது இம்மிதிவெடி கண்டுபிடிக்கப் பட்டது என கூறப்படுகிறது.

### ஆறாவது

அப்பாச்சியினால் திறந்து வைக்கப்பட்டது. இந் நீதிமன்ற திறப்பு விழாவில் முல்லை மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் ஜெமினி, தமிழீழ அரசியல்துறை நடுவகப் பணியக வன்னி பெருநிலப்பரப்பு துணைப் பொறுப்பாளர் மதன் ஆகியோர் உட்பட போராளிகள், காவல்துறையினர், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வன்னி பெருநிலப்பரப்பு நீதி நிர்வாகப் பொறுப்பாளர் சாந்தன் சம்பிரதாய பூர்வமாக நீதிமன்ற செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தார். நீதியாளர் தேசிகன் தலைமையில் இரு வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது.

### வாகரையில்

கொண்டு செல்லப்பட்டுள்ளனர். மேலும் இப்பகுதிக்கு வலிநிவாரணிகளான பனடோல், டிஸ் பிரின்போன்ற மருந்து வகைகளையும்வீவா, தீப்பெட்டி பேறு நுகர் பொருள்களையும் எடுத்துச் செல்ல இராணுவததினர் தடைவிதித்துள்ளனர்.

### வாகனத்தை

யது. இதனால் அங்கு தங்கி சிகிச்சை பெற்றவர்கள் பாதுகாப்புக் கருதி வைத்திய சாலையை விட்டு சிதறி ஓடிப் பாதுகாப்பு தேடிக்கொண்டனர்.

இக் கிபிர் தாக்குதலினால் சிலவீடுகள் சிறு சேதத்திற்குள்ளாகின. மேலும் கிளாலி கடற்பரப்பிலும் இது தாக்குதலைநடாத்தியது. 86

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 10- 01 - 1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 166

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

43-4045, 24-5437, 24-7087, 24-3594, 26-2573
41-9111, 27-7627, 40-697,9 40-2394, 24-5703
27-1292, 28-7662, 28-6623, 27-8164, 24-0416
27-9492, 26-3582, 26-2391, 26-0403, 24-9337
40-2432, 41-9663, 26-4501.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

24-1797, 27-4019, 28-9186, 24-0207, 26-1461
26-3410, 24-1040, 26-28 27, 24-6699, 41-9696
24-4957, 40-1516, 22-5857, 27-4920' 28-4183
26-5848, 27-6821, 28-4817, 26-4393, 28-4672
24-8603, 28-0912, 40-7584.

## INSTITUTION OF ENGINEERS, SRI LANKA

### *Centre – Northern Province*

INTRODUCTORY COURSE FOR PRE UNIVERSITY ENGINEERING STUDENTS — 2ND SESSION

The above Centre is making arrangements to conduct an Introductory Course in Engineering for students who are awaiting admission to the Engineering Courses at Universities in Sri Lanka.

Those who are interested are requested to register their name with our Secretary, on or before 17th January, 1994.

S. RUTHIRALINGAM,
8-Nallur Cross Road, Secretary,
JAFFNA. IESL—Centre (Northern Province)

(7193)


புத்தாண்டில்... புத்தம் புது நிகழ்ச்சி

யாழ். ரமணனின்

ராஜன்ஸ் இசையில் சாந்தன்

முதன் முறையாக இணைந்து பாட

ராஜன்ஸ் படைக்கும்

இன்னிசைப் பொங்கல்

S. G. சாந்தனுடன், ஜெயா சுகுமார், பார்வதி சிவபாதம், வர்ணராமேஸ்வரன், S. திவாகர், S. சத்தியசீலன், ஸ்ரனி சிவானந்தன், திருமலை சந்திரன், ஈழத்து மனோ நாவலன் ஆகியோரின் —


# சிறிலங்கா அமைச்சரவையில் அடுத்தமாதம் மாற்றம்?

(கொழும்பு)

சிறிலங்கா அமைச்சரவையில் பெப்ரவரியில் சில மாற்றங்கள் நிகழலாம் என கொழும்பு செய்திகள் கூறுகின்றன உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு முன் இம் மாற்றங்கள் நிகழலாம் எனவும் கூறப்படுகிறது.

கல்வி அமைச்சு, நீதி நிர்வாகம், பொது நிர்வாகம் ஆகிய அமைச்சுக்களிலேயே இம் மாற்றங்கள் நிகழவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது இ. தொ. கா. பொதுச் செயலர் செல்லச்சாமிக்கு அமைச்சர் நியமனம் கிடைக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

# விசேட எழுதுவினைஞருக்கு நிரந்தர நியமனம்

(நமது நிருபர்)

விசேட எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை மூலம் முதன்முதலாக தெரிவுசெய்யப்பட்ட 200 எழுதுவினைஞர்களும் நிரந்தரமாக்கப் படவுள்ளனர் இவர்களுள் 60 பேருக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் யாழ். அரச அதிபருக்கு கிடைத்துள்ளன.

மேற்படி ஊழியர்களுக்கான கடிதங்கள் வெகுவிரைவில் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுமெனவும் மற்றைய ஊழியர்களது நிரந்தர நியமனக் கடிதங்கள் மாகாணசபையால் அந்தந்த திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்படுமெனவும் அரச அதிபர் தெரிவித்தார். (சி)

# யாழ். மாவட்டத்தில் 2017 ஆசிரியர் வெற்றிடம்

யாழ். மாவட்டத்தில் 2017 ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளதாக அரசாங்க அதிபருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் பட்டதாரி மற்றும் ஏனைய ஆசிரியர்களுக்குமான வெற்றிடங்கள் அடங்குமென தெரிவிக்கப்பட்டது-

கொழும்பில் ஆசிரியர் வெற்றிடம் தொடர்பான விசேட கூட்டமொன்று நடைபெறவுள்ளதாக தெரிவித்த அரச அதிபர் அக்கூட்டத்தில் மேற்படி வெற்றிடம் பற்றி தாம் தெரிவிக்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளைத் தலைமையகம்

## பிரிவுத்தேர்தல் - 1994

பிரிவுத் தேர்தல் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கீழ் இயங்கும் 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும், பளைப் பிரிவிலும், 27-03-94-ம் திகதி நடைபெறவுள்ள பிரிவுப் பொதுச்சபைக் கூட்டத்தில் நடைபெறும். 1994-ம் ஆண்டுக்கான அங்கத்துவப் பணத்தை பிரிவுகளில் 11-02-94 க்கு முன்னதாகச் செலுத்தி, பிரிவினால் 12-02-94 க்கு முன்னதாக யாழ். கிளையில் செலுத்திய துரித உறுப்பினர்களும், ஏனைய ஆயுள் உறுப்பினருமே இத் தேர்தலில் போட்டியிடவோ, வாக்களிக்கவோ, பங்குபற்றவோ, தகுதியுடையோராவர். செயற்குழு உறுப்பினர்கள் பதவிக்கான நியமனப்பத்திரங்கள், 06-03-94 தொடக்கம் அவ்வப் பிரிவுப் பணிமனைகளில் பெற்றுக் கொள்ளலாம். 13-03-94 மு. ப. 9-00 மணி தொடக்கம் பி. ப. 4-00 மணி வரை நியமனப்பத்திரங்கள் பிரிவுக் காரியாலயங்களில் ஏற்றுக்கொள்ளப்படும். 15-03-94 மு. ப. 9-00 மணி தொடக்கம் பி. ப. 4-00 மணி வரை நியமனப்பத்திரங்கள் பிரிவுக் காரியாலயங்களில் வாபஸ் பெற்றுக்கொள்ளலாம். 27-03-94 மு. ப. 10-00 மணிக்கு நடைபெறவுள்ள அவ்வப்பிரிவு பொதுச்சபைக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் மூவர் அடங்கிய தேர்தல் குழு. இரகசிய வாக்குச் சீட்டு மூலமும் தேர்

# வீரச்சாவு



மேஜர் சுகு



லெப். சிவகாந்தன்

சுகவீனம் காரணமாக விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் நேற்றுக்காலை வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

மேஜர் சுகு (அருணாசலம் மகேந்திரன் - செங்கலடி மட்டக்களப்பு) என்னும் போராளியே இவ்வாறு வீரச்சாவடைந்தவராவார்.

இவரின் வித்துடல் றீகன் நகரிலிருந்து இன்று பிற்பகல் மூன்றுமணிக்கு அஞ்சலிக் கூட்டத்தை அடுத்து இராணுவ மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் புனித விதை குழியில் விதைக்கப்படும்.

ஃ ஃ ஃ


பூநகரிப் பகுதியில் கடந்த 8ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட திடீர் மோதலின் போது லெப்டினன்ட் சிவகாந்தன் (மூர்த்தி சாமிநாதன் - உயிலங்குளம் மன்னார்) எனும் போராளி வீரச்சாவடைந்தார் இவ் இருவருக்கும் விடுதலைப் புலிகள் தமதுவீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# நிவாரணத்திற்கு மா வழங்கப்படும்

டிசெம்பர்மாத இரண்டாம் கட்ட நிவாரணத்திற்கு மா வழங்கப்பட உள்ளதாக புனர்வாழ்வுப் பகுதி தெரிவித்துள்ளது.

குடா நாட்டில் தற்சமயம் ஏற்பட்டுள்ள மா தட்டுப்பாட்டை நீக்குமுகமாக தற்போது பருத்தித்துறை துறைமுகத்தில் மாகோ கப்பலில் இருந்து இறக்கப்படும் மாவை உடனடியாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கஉள்ளதாகவும் நேற்று முன்தினமே பேக்கரிகளுக்கு மா வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி

### மகேந்திரன் காந்தரூபி (நந்தினி)

(நவாலி ம. வி. க. பொ, த. (சா/த) வகுப்பு மாணவி)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 2-2-1977 | 23-12-1992 |

திதி: 11-1-1994

ஆண்டொன்று சென்றாலும்
அன்பு முகம் மறக்க முடியவில்லை
அழியா நினைவலைகள் ஆட்டிப்படைக்கிறதே
இனி என்று உம் முகம் காண்போம்?

பறிகொடுத்து பரிதவிக்கும்
அப்பா, அம்மா,
அண்ணா, தங்கை,
அப்பம்மா உறவினர்,

நவாலி அரசடி,
மானிப்பாய்.

(ஓ-8331)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அனுஷம்மா தருமலிங்கம்

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொட்டடி, நீராவியடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அனுஷம்மா தருமலிங்கம் 04-01-94 இல் திருச்சியில் காலமானார். இவர் தருமலிங்கத்தின் அன்பு மனைவியும், சோமநாதபிள்ளை, சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்புமகளும் திருமதி நாகம்மா (அவுஸ்திரேலியா), அமரர்திரு சோ. கந்தையா (இளைப்பாறிய ஆசிரியர்), திருமதி பராசக்தி (திருச்சி) ஆகியோரின் சகோதரியும் விநாயகமூர்த்தி (பொறியியலாளர், புகையிரதத் திணைக்களம், கொழும்பு), தியாகராசா (பிரான்ஸ்), பிரபாவதி (திருச்சி), திருச்செல்வம்

திருமலை சந்திரன், ஈழத்து மனோ
நாவலன் ஆகியோரின் —

## ★ இசைச்சுவை ★

“சிற்றி போய்ஸ் டெய்லர்ஸ் ஆதரவில்”
தங்கவேல் செல்வராஜா குழுவினரின்
“சிரியுங்கள் சிந்தியுங்கள்”

## ★ நகைச்சுவை ★

மாஸ்ரர் T. கஜேந்திரனின் ஓர்கன் இசை

இடம்: வேம்படி மகளிர் கல்லூரி
காலம்: 14-01-1994
நேரம்: பி. ப. 2. 30, மாலை 7மணி
டிக்கெற்: 100/- 50/-

கிடைக்கும் இடம்:
மணிக்குரல் விளம்பர சேவை

(7191)

---

## யா/ விக்னேஸ்வரக் கல்லூரி
## உயர்தர மாணவர் மன்றம்
கரவெட்டி

# “ஏணி” இதழ்
# வெளியீட்டு விழா!

யா/விக்னேஸ்வரக் கல்லூரி உயர்தர மாணவர்கள் வெளியீடான ‘ஏணி’ இதழ் வெளியீட்டு விழா புதன்கிழமை (12-01-94) பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். பழைய மாணவர்களையும், நலன் விரும்பிகளையும், ஆர்வலர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உயர்தர மாணவ மன்றம்

(7192)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

---

கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் மூவர் அடங்கிய தேர்தல் குழு, இரகசிய வாக்குச் சீட்டு மூலம் தேர்தலை நடாத்தும் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம், நேரம், நிகழ்ச்சி நிரல் ஆகிய ஒவ்வொரு பிரிவுச் செயலாளரினால் பங்கு பற்றத் தகுதி வாய்ந்த உறுப்பினர்களுக்கு 20-03-94க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படும்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
08-01-94

செஞ்சிலுவைச் சங்க சேவையில்
கௌரவ செயலாளர்

(சி-8342)

---

### தலைவர்

துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி சென்றிக் பிரலாவிடம் கையளித்தார். இவர் நேற்று மாலை 3.00 மணியளவில் மாகோ கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

(யோ)

---

## இலங்கை செஞ்சிலுவைச் சங்க
## யாழ். கிளைத் தலைமையகம்
# பயிற்சி நெறிகள் 1994

கீழ்வரும் இலவச பகுதி நேர வார இறுதி வகுப்புப் பயிற்சி நெறிகள் யாழ். கிளைத் தலைமையகத்தில் நடத்தப்படவுள்ளன. பயில விரும்புவோர் குறைந்தது க. பொ. த. சாதாரண பரீட்சையில் கீழ்வரும் ஒவ்வொரு பயிற்சி நெறியின் நேராகவுள்ள அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ள பாடங்கள் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து | — | (தமிழில் திறமைச் சித்தி) |
| ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து | — | (ஆங்கிலத்தில் திறமைச் சித்தி) |
| சமூகநலனும், சமுதாய சேவையும் | — | (தமிழ், ஆங்கிலம், கணிதம் சித்தி) |
| முதல் உதவி | — | (சுகாதாரம் சித்தி) |
| ஆரம்ப சுகாதாரம் | — | (சுகாதாரம் / சமூகவியல் சித்தி, உதவித் தாதி பயிற்சி பெற்றோருக்கு முன்னுரிமை) |
| உதவித் தாதி | — | (சுகாதாரம் சித்தி) |
| மருந்தாளர் பயிற்சி (Dispenser's Course) | — | (தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் சித்தி) |

ஆங்கிலம்
ஓவியம், சிற்பம், சித்திரம்.

விண்ணப்பங்களை தாம் வதியும் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரிவுத் தலைவரின் சிபாரிசுடன் எமக்கு 20-01-94 ற்கு முன்பாக அனுப்பிவைக்கவும். இதற்காக 22-01-94 முற்பகல் 9 மணிக்குத் தலைமையகத்தில் நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்கு சான்றிதழ்களுடன் சமுகந்தரவும். 29-01-94ல் இப்பயிற்சி நெறிகள் ஆரம்பமாகும். பயிற்சி முடிவில் நடைபெறும் பரீட்சையில் சித்தியடைவோருக்கு சான்றிதழ் வழங்கப்படும்

73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
10-01-1994

செஞ்சிலுவைச் சங்க சேவையில்,
கௌரவ செயலாளர்

(சி-8341)

---

புகையிரதத் திணைக்களம், கொழும்பு), தியாகராசா (பிரான்ஸ்), பிரபாவதி (திருச்சி), திருச்செல்வம் (கொழும்பு), திருமதி மணிமேகலை (U.K), சிவபாலன் (பிரான்ஸ்), ராஜேஸ்வரன் (U.K), ராஜேஸ்வரி (பிரான்ஸ்), பிரேமா (திருச்சி) ஆகியோரின் அருமைத் தாயாரும், திருமதி வி. சிவகாமசுந்தரி, திருமதி தி. கலைவாணி (பிரான்ஸ்), திரு. பஞ்சாட்சரம் (U. K), திரு. கோணேஸ்வரன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமியும், சுரேந்திரன், சுகேந்திரன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், அமரர் கதிரவேலு, திருமதி க. சாரதாம்பாள், திரு. சோமசுந்தரம் (திருச்சி) ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் திருச்சியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சா. கந்தையா
(மைத்துனி)

32/1 பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(7195)

---

## திரு. சண்முகம் பக்கிரிசாமி
(பிரபல தவில் வித்துவான்)

சித்தன்கேணியைச் சேர்ந்த சண்முகம் பக்கிரிசாமி அவர்கள் 10-01-94 திங்கட்கிழமை காலமாகி விட்டார். அன்னார் பூரணத்தின் அன்புக் கணவரும், திருமதி சுப்பிரமணியம் சரஸ்வதி (சித்தன்கேணி), ப. இராசரெத்தினம் (முன்னாள் சாரதி வ. பி. போ. ச) காலஞ்சென்ற ப. கோபாலசாமி (சாவகச்சேரி) ப. யோகலிங்கம் (கனடா), ப. சண்முகசுந்தரம் (கனடா), ப. ஞானசுந்தரம் (கனடா), திருமதி கிருஸ்ணமூர்த்தி இரத்தினாம்பாள் (கனடா), திருமதி சுப்பிரமணியம் உதயலச்சுமி (கொழும்புத்துறை), திருமதி அருள்ராசா தனலச்சுமி (சித்தன்கேணி), ப. சற்குணராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ச. சுப்பிரமணியம் திருமதி இ. வடிவாம்பிகை, திருமதி யோ. வசந்தா, திருமதி யோ. ரேவதி, திருமதி ச. பேபி, மு. கிருஸ்ணமூர்த்தி (கனடா), அருள்ராசா (மன்னார்), N. சுப்பிரமணியம் (கொழும்புத்துறை), திருமதி R. சாந்தி, திருமதி R. பபி ஆகியோரின் அருமை மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சித்தன்கேணியில் உள்ள அவரது இல்லத்தில் 11-01-94 இன்று பி. ப. 1-00 மணியளவில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
ப. இராசரத்தினம்
(மகன்)

கீரிமலை வீதி,
சித்தன்கேணி.
(7196)